**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| இரத்தினபுரி | கொடகவெல | மாதம்பே பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் அடகலங் கோறளை பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி. |

*12-416*

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

*சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2023*

*சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் காணப்படும் அரச சட்டவாதிகளுக்கான 23 பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்களுக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

கொழும்பு 12 இல் அமைந்துள்ள சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் நிருவாகப் பிரிவில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் திகதி அல்லது அதற்கு முன்னதாக "சட்ட மாஅதிபர், சட்ட மாஅதிபர் திணைக்களம், த. பெ. இல. 502, கொழும்பு 12" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரச சட்டவாதிகள் பதவிக்கான விண்ணப்பம் - 2023" என்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி : 2024.01.22 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதம் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும் போது காணாமல் போனதாக காலதாமதம் ஆனது என பின்னர் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்பத்திரம் தாமதப்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய இழப்புக்கள் விண்ணப்பதாரியால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பதாரிகளிடமிருந்து பெறப்படும் விணண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் மறு அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

01. **ஆட்சேர்ப்பு முறை** -

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் அனுமதிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் 50 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளால் பெறும் விண்ணப்பதாரிகளில் அவர்களின் புள்ளிகளின் திறன் முறைக்கேற்ப இருக்கும் வெற்றிடங்களுக்கு அமைய சேர்த்துக் கொள்ளப்படும். அங்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 09 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் முறைக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டமைப்புக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

02. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதுடன், ஓய்வூதியமுடையதுமாகும். உமக்குரிய ஓய்வூதிய முறை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் உட்படுவீர், விதவைகள், தபுதாரர் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் முறைக்கு ஏற்ப நீர் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப் பதவியில் அமர்த்தப்படும் உத்தியோகத்தர்கள் 03 வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்;

(iii) 2020.10.16 ஆந் திகதியுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய குறித்த ஏனைய அரசகரும மொழியில்/அரச கரும மொழிகளில் நிபுணத்துவம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் செயல்முறை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கு அமையவும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் நிறைவேற்றுச் சேவை வகுப்புக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகள் மற்றும் அவைகள் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் திருத்தங்களில் உட்படுத்தப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், திணைக்களப்படுத்தப்பட்ட ஏனைய கட்டளைகளுக்கும் இந்த ஆட்சேர்ப்பு உட்பட்டதாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு, AGS-2-2016, ரூபா 75,000.00-10 × 1,630 - ரூபா 91,300.00 மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.

04. **கல்வி/தொழில் தகைமை :**

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் கல்வித் தகைமைகள் மேலதிக தகைமைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

05. **அனுபவம் :**

இத்துறையில் பெற்றுக்கொண்ட அனுபவம் விசேட தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

06. **வயது எல்லை :**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதிற்கு மேற்பட்டதாகவும் 35 வயதுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

07. **உடற் தகைமை :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பணி புரிவதற்கும் மற்றும் பதவியின் கடமைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

08. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) இலங்கைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றத்திற்காக குற்றவாளியாகக் காணப்படாதிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியின் போது அதாவது 2024.01.22 ஆந் திகதியன்று இப்பதவிக்காக இணைத்துக் கொள்ளப்படுவதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

09. **ஆரம்ப தகுதிகாண் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை.-**

ஆரம்ப தகுதிகாண் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கும் முறைமை பயன்படுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | புள்ளி வழங்கப்படும் முறை | புள்ளிகள் | அதிகூடிய புள்ளி |
|---|---|---|---|
| 01. | **கல்வித் தகைமைகள்** | | |
| | (i) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்/ பல்கலைக்கழகமொன்றில் வழங்கப்பட்ட சட்டத்துறை முதுமாணிப் பட்டம் (LLM) | 10 | 20 |
| | (ii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்/ பல்கலைக்கழகமொன்றில் வழங்கப்படும் சட்ட முதுமாணிப் பட்டம் குறித்த பட்டப் படிப்பு சம்பந்தமான டிப்ளோமா | 08 | |
| | (iii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்/ பல்கலைக்கழகமொன்றில் வழங்கப்படும் சட்ட மாணி பட்டம் முதல் நிலை சித்தி (LLB) | 07 | |
| | (iv) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்/ பல்கலைக்கழகமொன்றில் வழங்கப்படும் சட்ட மாணி பட்டம் இரண்டாம் நிலை மேல் நிலை சித்தி (LLB) | 06 | |
| | (v) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்/ பல்கலைக்கழகமொன்றில் வழங்கப்படும் சட்ட மாணி பட்டம் இரண்டாம் வகுப்பு கீழ் நிலை சித்தி (LLB) | 05 | |
| | (vi) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி வருட பரீட்சையின் முதல் நிலை கௌரவ சித்தி | 07 | |
| | (vii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி வருட பரீட்சையின் இரண்டாம் நிலை கௌரவ சித்தி | 06 | |
| | அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் என்பது கூட்டிணைக்கப்பட்ட சட்ட கல்விச் சபை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனமாகும்<br>(மேற்கூறப்பட்ட சகல திறன்களும் அதிகபட்சமாக 20 புள்ளிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)<br>❖ மேற்குறித்த கல்வித் தகைமைகள் சான்றுப்படுத்தல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். | | |
| 02. | **தொழில் அனுபவம்** | | |
| | (i) நீதிமன்ற வழக்கு முன்னெடுப்புகளின் தோன்றி நடாத்திச் செல்லும் திறமை | 10 | 20 |
| | (ii) பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஒருவராக அல்லது சட்ட ஆலோசகர் ஒருவராக பணியாற்றி சேவை செய்த போது காட்டிய திறமைகள் | 10 | |
| | (மேற்குறித்த திறமை சம்பந்தமாக சான்றிதழ் சம்ர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)<br>**குறிப்பு** : நீதிபதியொருவரின் மூலம் தொழில் திறன் சம்பந்தமாக பெற்றுக் கொண்ட சான்றிதழ் ஒன்று மற்றும் 20 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை பூரணப்படுத்தியுள்ள சட்டத்தரணிகள் இருவரிடம் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் முன்வைக்கப்பட வேண்டும். சட்டமா அதிபர் திணைக்கள சட்ட உத்தியோகத்தர் மூலம் வழங்கப்படும் நன்னடத்தைச் சான்றிதழ் ஏற்புடையதாகாது. | | |
| 03. | **விஷேட திறமைகள்** | | 20 |
| | (i) தொடர்பாடல் திறமை | 05 | |
| | (ii) சமயோசித பேச்சுத் திறன் | 05 | |
| | (iii) சபையில் திறனாக தோன்றி வாதாடும் திறன் | 05 | |
| | (iv) சபையை நெறிப்படுத்தும் திறன் | 05 | |

| தொடர் இலக்கம் | புள்ளி வழங்கப்படும் முறை | புள்ளிகள் | அதிகூடிய புள்ளி |
|---|---|---|---|
| 04. | **நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறமை** | | 40 |
| | (i) ஆளுமை | 10 | |
| | (ii) தலைமைத்துவப் பண்பு | 10 | |
| | (iii) சட்டம் மற்றும் நீதிமன்ற நடைமுறைகள் சம்பந்தமான அறிவு | 20 | |
| | **மொத்தம்** | | 100 |

10. **விண்ணப்பதாரியை அடையாளப்படுத்துதல்**.- சகல விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகுதிகாண் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதி மற்றும் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களம் மூலம் விநியோகிக்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

கவனிக்கத்தக்கது :
(அ) அடையாள அட்டையுடன் ஏதேனும் ஆவணம் அல்லது அதன் பிரதி இணைக்கப்படக் கூடாது.
(ஆ) நேர்முகப் பரீட்சையின் போது ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. **தவறான தகவல்களினை வழங்குதல்**.- உங்களால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பத்தில் ஏதேனும் தவறான தகவல் குறிப்பிடப்பட்டுள்ளமை குறித்து தெரிய வந்தால் உங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறான பிழையான அல்லது போலியான தகவல்கள் ஆட்சேர்ப்பின் பின்னர் அறியக் கிடைத்தால் உரிய செயல்முறைகளின் கீழ் எந்த சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களை பூர்த்தி செய்வது அல்லது பூர்த்தி செய்யாமல் விடுவதற்கான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

13. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதாவது முரண்பாடு காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சஞ்ஜய் ராஜரட்ணம்,
சட்ட மாஅதிபர்.

உச்ச நீதிமன்ற கட்டிடத்தொகுதி,
சட்ட மாஅதிபர் திணைக்களம்,
கொழும்பு 12.
2023, திசெம்பர் 11.

12-447